DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 09/2025 |
| Deposition of witness | : | P.W – 4 |
| Name | : | ரத்தினசபாபதி |
| Father's /Husband Name | : | அமிர்தலிங்கம் |
| Village | : | சலிப்பேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20[th]day of February 2025.

Accused present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பத்தை 29.11.2024-ம்தேதி காலை 09.15 மணிக்கு நன்னிலம் போலிசார் சலிப்பேரி மல்லிகா என்பவர் வீட்டில் செயின் திருட்டு போனது சம்பந்தமாக வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், முத்துகிருஷ்ணன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

இவ்வழக்கு சம்பந்தமாக நான் முத்துகிருஷ்ணன், நித்தியானந்தம், சாமிநாதன் ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றோம் என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் இருந்த விபங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 09/2025 |
| Deposition of witness | : | P.W – 5 |
| Name | : | சாமிநாதன் |
| Father's /Husband Name | : | குப்புசாமி |
| Village | : | சலிப்பேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 60 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of February 2025.

Accused present.

**முதல் விசாரணை:–**

அ.சா.1 மல்லிகா எங்கள் தெருவில் வசிப்பவர். அவர் கடந்த கார்த்திகை மாதத்தில் ஒரு நாள் அதிகாலை வீட்டில் இருந்த போது அவர் வீட்டில் இருந்த சத்தம் கேட்டது நான் சென்று பார்த்த போது அ.சா.1–ன் செயினை அறுத்து விட்டதாக கூறினார். அது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை

**மறு விசாரணை**

இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 09/2025 |
| Deposition of witness | : | P.W – 6 |
| Name | : | ஸ்ரீதர் |
| Father's /Husband Name | : | பிச்சையா |
| Village | : | சலிப்பேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 48 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of February 2025.

Accused present.

**முதல் விசாரணை:-**

அ.சா.1 மல்லிகா எங்கள் தெருவில் வசிப்பவர். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். நன்னிலம் போலிசார் சலிப்பேரி மல்லிகா வீட்டு அருகே செயின் பறிப்பு வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள். இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது போலிசார் என்னை விசாரிக்கவில்லை. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பமும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பங்களும் என்னுடையது தான். அதை போலிசார் கேட்டதால் செய்துகொடுத்தேன். அவைகள் முறையே, **அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 29.11.2024-ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் ஸ்ரீவாஞ்சியம் கடைத்தெருவில் இருந்த போது ஆஜர் எதிரியை என் முன்னிலையில் விசாரித்தார் என்றும், அவ்வாறு விசாரித்த போது எதிரி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதன் பேரில் போலிசார் எதிரியிடமிருந்து நகைகளை கைப்பற்றினார் என்றும், அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.